பாடம் 7 தேவன் ஆபிராமுடன் செய்த உடன்படிக்கை (ஆதி 11:12)

தேவன் இதுவரையிலும் யாருக்குமே கொடுத்திராத பெரிய வாக்குத்தத்தங்களை குறித்து இந்த பாடம் சொல்கிறது. ஆபிராம் மெசபடோமியாவில் இருக்கும் போது, மகிமையின் தேவன் தரிசனமானார். ஆபிராமின் சந்ததியில் வரும் ஒருவரால் சர்வ உலகமும் ஆசீர்வதிக்கப்படும் என்று கூறினார். இதன் அர்த்தம் ஆபிராமிற்கு முழுமையாக புரியவில்லை என்றாலும், தேவன் மேசியாவை குறித்தே இதை சொன்னார். மேசியா என்பதற்கு அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்து என்று பொருள். மேசியாவின் வருகையை குறித்து அவர் பிறப்பிற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே ஏசாயா போன்ற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பலர் முன் அறிவித்துள்ளனர். ஆனால் ஆபிராமால் தேவனின் வாக்குதத்தத்தை விசுவாசிப்பது கடினமாயிருந்தது. அவனும் அவன் மனைவியும் ஒரு குமாரனை பெற்றெடுக்க முடியாமலிருந்தது.

ஒரு நாள் கர்த்தர் ஆபிராமை நோக்கி, “நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனை சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்’’ என்றார்.

ஆபிராம் தன் தகப்பன் தேராவுடன் வாழ்ந்து வந்தான். அவர்கள் ‘‘ஊர்’’ என்கிற கல்தேயருடைய பட்டணத்தில் வாழ்ந்து வந்தார்கள். இன்று அந்த பட்டணம் ஈராக் தேசமாக விளங்குகின்றது. ஆபிராமிற்கு இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அதில் ஒருவர் மரித்துப் போனார். அந்த சகோதரரின் மகன் பெயர் லோத். ஆபிராம் வளர்ந்ததும் தன் சகோதரி முறையிலான சாராயை மணந்து கொள்கிறான். ஆனால் அவர்களுக்கு குழந்தைப்பேறு இல்லை. அதனால் அவன், ஜனங்களையும், அவன் தேசத்தையும் விட்டு விட்டு அவன் தகப்பன் தேராகுவையும், லோத்தையும் சமாதானப்படுத்தி அவர்கள் எல்லாரும் ‘‘ஊர்’’ பட்டணத்தை விட்டு கானான் தேசத்திற்கு தேவன் சொன்னபடியே புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் பெரிய ஐபிராத் நதியின் வடக்கு வழியாக ஆரான் மட்டும் வந்த போது, அங்கே தங்கி விட்டார்கள்.

ஆரான் மற்ற இடங்களைப் போலவே இருந்தது. ஜனங்கள் ஜீவனுள்ள தேவனை தொழுது கொள்வதை விட்டு விட்டு, விக்கிரகங்கள் மற்றும் சந்திரனை தெய்வமாக தொழுது கொண்டு வந்தனர். ஆரோன் பாபேலின் கோபுரம் இருந்த இடத்தில் இருந்து 400 மைல்கள் வடக்கே உள்ளது. தேவன் ஆபிராமை கட்டளையிட்டு போகச் சொன்ன கானான் தேசத்தில், அந்த இடம் இல்லை. ஆபிராமின் தகப்பன் தேராகு, 205 ஆம் வயதில் மரித்தார். அவர்கள் அதுவரையில் அங்கேயே தங்கி இருந்தார்கள். இந்த நிலையில் ஆபிராம் 75 வயது உடையவராக இருந்தான். தேராகு மரித்த பிறகு, ஆபிராம் தேவன் அவனுக்கு கட்டளையிட்ட காரியங்களை நினைவுகூர்ந்து ,தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தடைப்பட்டிருந்த அவனுடைய பயணத்தை மறுபடியும் கானானை நோக்கி தொடர்ந்தான். அவனுக்கு தேவன் எங்கு நடத்திச் செல்கிறார் என்பது தெரியவில்லை. ஆனால் தேவன் அவன் பாதையை நடத்துகிறார் என்பதை அறிந்திருந்தான்.

ஆபிராமின் ஆசீர்வாதங்களை பலவாறு பிரிக்கலாம். ஆபிராம் தகப்பனாவான் என்பது அவனோடு தேவன் செய்த முதல் வாக்குத்தத்தம். இரண்டாவதாக, அவனுடைய சந்ததியினர் தேவனால் முன் குறிக்கப்பட்ட இஸ்ரவேல் என்கிற பெரிய தேசத்திற்குறியவராய் இருப்பர். தேவனுடைய ஆசீர்வாதங்களை ஆபிராம் சுதந்தரித்தபடியினால் அவனுடைய பெயர் பூமியில் பெரியதாக விளங்கப்படும். தேவன் அவனுக்காக யுத்தம் செய்வார்.பின்னர் கடைசியாக அவனுடைய சந்ததியில் தான் முழு உலகத்தையும் ஆசீர்வதிக்கிற மேசியா வருவார். அவரே தேவனோடு கூடிய ஐக்கியத்தை மனித குலத்தோடு ஒப்புரவாக்குவார்.

ஆதலால் ஆபிராம் தன் மனைவி சாராய் மற்றும் அவன் சகோதரர் மகன் லோத்துடன்,ஆரானை விட்டு வெளியேறி மத்திய தரைக்கடலின் கிழக்கு பகுதியில் உள்ள கானான் தேசத்தை வந்தடைந்தான். இது மறுபடியுமாக 400 மைல்கள் பிராயணத்தை உடையது. இந்த கானான் தற்பொழுது உள்ள யோர்தான்,லெபனான் மற்றும் சிரியா பகுதிகளாக விளங்குகின்றது. கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, "உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்" என்றார். அப்பொழுது அவன் அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, "சீகேம்" என்ற இடத்தில் அவரை தொழுது கொண்டான். (ஆதி 12.7) கானானிய தேச மக்கள், ஒரு குறிப்பிட்ட மரத்தை அங்கே தொழுது கொண்டிருந்தனர், ஆனால் ஆபிராமோ கர்த்தரை அங்கே தொழுது கொண்டான். ஆபிராம் கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதை பார்க்கும் முன்னதாகவே அவருடைய வார்த்தையை விசுவாசித்தான். இதுவே "ஆபிராம் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. (ஆதி 15.6)

சில நாட்களுக்குப் பிறகு, அந்த தேசத்திலே கொடிய பஞ்சம் ஒன்று உண்டாயிற்று. அதனால் ஆபிராம் அவனிடத்தில் இருந்த வேலைக்காரர் மற்றும் மிருக ஜீவன்கள் அனைத்தையும் கூட்டிச் சேர்த்து கொண்டு, எகிப்திலே குடியிருக்கச் சென்றான். அந்த நாட்களிலே ஆபிராம், அந்நிய தேசத்து இளவரசனைப் போல் பார்க்கப்பட்டான். எனவே எகிப்திற்குள் நுழைவதற்கு அவன் பார்வோன் ராஜாவுடன் சமாதான உடன்படிக்கை செய்தாக வேண்டும். இங்குள்ள பாரம்பரியம் என்னவென்றால் அந்நிய தேசத்தினர் அவருடைய குமாரத்தியையோ அல்லது சகோதரியையோ பார்வோன் ராஜாவுக்கு மறுமனையாட்டியாக தந்து சமாதானத்தை உறுதிப்படுத்திக் கொள்வர். ஆதலால் ஆபிராம் விசுவாசம் இல்லாமல் பயத்துடனே சாராயிடம் "எகிப்தியர் உன்னை காணும் போது, இவள் அவனுடைய மனைவி, அழகுள்ளவள் என்று சொல்லி என்னைக் கொன்று போட்டு உன்னை எடுத்துச் செல்வார்கள். ஆகையால்,நீ உன்னை என் சகோதரி என்று சொல்" என்றான். அவன் சொன்னது சரிதான், ஏனென்றால் அவள் 65 வயதை உடையவளாயிருந்தும் எகிப்தியர் சாராய் மிகுந்த அழகுள்ளவளென்று கண்டார்கள். அவளுக்கு திருமணம் ஆகவில்லை என்று பார்வோன் எண்ணி, அவளை தனது மறுமனையாட்டிகளுள் ஒருவளாக ஆக்கிக்கொள்ள அரண்மனைக்கு கொண்டு சென்றான். அவள் நிமித்தம் பார்வோன் ஆபிராம், சாராயுடைய சகோதரன் என்று எண்ணி தயை பாராட்டி பல வெகுமதிகளை கொடுத்தான்.

சாராயை பார்வோன் அவன் வீட்டுக்கு கொண்டு சென்றதின் நிமித்தமாக கர்த்தர் அவன் மீது கோபம் கொண்டார். சாராய் ஒரு பெரிய தேசத்திற்கு தாயாக தேவனால் முன் குறிக்கப்பட்டவள். எனவே அவள் அந்நிய தேச ராஜாவிற்கு, மணமுடிக்கப்பட கூடாது. இதனால் மகா வாதைகளால் பார்வோனின் வீட்டார் அனைவரும் நோய் வாய்ப்பட்டு வதைக்கப்பட்டனர். அதன் பிறகே பார்வோன் சொப்பனத்தின் வாயிலாக இந்த மகா பெரிய வாதைகளுக்கு காரணம் சாராய் தான் என்பதை அறிந்து கொண்டான். பார்வோன், ஆபிராமை தன் அரண்மனைக்கு பேச்சுவார்த்தைக்காக அழைத்தான். "நீ ஏன் எனக்கு இப்படிச் செய்தாய்? இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமற் போனதென்ன? நீ இவளை உன் சகோதரி என்றல்லவா சொன்னாய். இப்பொழுது உன்னுடைய மனைவி இவள் என்று அறிந்தேன். இவளை அழைத்துக்கொண்டு இங்கிருந்து போ" என்று சொன்னான்.

பிறகு ஆபிராம் அவனுடைய மனைவி சாராய் மற்றும் அவனுடைய சகோதரன் மகன் லோத்தையும் அழைத்துக் கொண்டு கானான் தேசத்திற்குச் சென்றான். ஆபிராம் எகிப்திலே இருக்கும் போது மிகுந்த செல்வந்தன் ஆனான். அவன் ஆடுமாடுகள், கழுதைகள், வேலைக்காரர், வேலைக்காரிகள், கோவேரிக் கழுதைகள், ஒட்டகங்கள் உடைய செல்வச்சீமானாயிருந்தான். அவன் குடும்பம், கானான் தேசத்திற்கு திரும்பி வந்து, பெத்தேல் என்ற இடத்தில் கூடாரம் போட்டனர். அதற்கு "கர்த்தரின் வீடு" என்று பொருள். அங்கே, தான் ஏற்கெனவே உண்டாக்கின பலிபீடம் இருந்த ஸ்தலத்திற்கு போய் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான்.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது. இப்படியாக, மனுகுலத்தை மறுபடியாக தேவன் ஆதிமுதல் இருந்த அவரின் சித்தத்தின்படி மீண்டும் தமக்குள்ளாக ஐக்கியமாக்கி கொள்வார். ஒரு குடும்பத்தை அவர்கள் இருக்கும் வண்ணமாகவே அப்படியே தெரிந்து கொள்வார். அதன் பின்னர் அவர்கள் எப்படி

இருக்க வேண்டும் என்று அவரின் விருப்பத்திற்கேற்ப வடிவமைத்து கொள்வார். அதைப் போலவே அவருடைய வாக்குதத்தங்களை நாம் விசுவாசித்து அவரிடத்தில் வந்தால், உன்னையும் என்னையும் நாம் இருக்கிற பிரகாரமாய் ஏற்றுக்கொண்டு அவரின் சித்தத்தின்படி வடிவமைத்து கொள்வார்.அவருடைய வாக்குத்தத்தங்களை ஆபிராமும் சாராயும் விசுவாசித்தார்கள். பயத்தின் காரணமாக அவர்கள் தவறுகள் செய்தார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிவதை நிறைவேற்றிக் கொண்டே இருந்தார்கள். போராட்டங்கள் துன்பங்களுக்கு மத்தியிலும், கீழப்படியும் விசுவாசத்தையே கர்த்தர் ஒவ்வொரு விசுவாசிகளிடத்திலும் எதிர்பார்க்கிறார். ஆபிராமின் வாழ்க்கையில் சொல்லப்பட்ட மிகவும் முக்கியமான சத்தியம் என்னவென்றால் கர்த்தருக்கு கீழ்ப்படிவதே ஆசீர்வாதத்தை தரும். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஆனால் அவரைத் தாகத்தோடு தேடுகிறவர்களுக்கு அவர் எல்லா நன்மையும் தருகிறார் (எபி 11:6)

இந்தப் பாடத்தை திரும்பி பார்க்க ,பின்வரும் கேள்விகளுக்கு பதிலளியுங்கள்:

1.பார்வோனிடம்,ஆபிராம் சாராயை தன்னுடைய மனைவி அல்ல சகோதரி என்று ஏன் கூறினான்? a)(6 நொடிகள் தாமத்தின் பிறகு)

சாராயை அடைவதற்கு பார்வோன் தன்னைக் கொல்லக்கூடும் என்று பயந்திருந்தான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. ஆபிராமுக்கு கர்த்தர் கொடுத்த கட்டளை என்ன? a)(6 நொடிகள் தாமத்திற்கு பிறகு)

‘‘நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசிர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்’’ என்று அவனிடம் தேவன் சொன்னார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. தேவனுடைய பார்வையில் ஆபிராம் எதனால் நீதிமானாக கருதப்பட்டான்?
a)(6 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)
தேவன் மீது அவன் வைத்த விசுவாசத்தினாலே தேவனுடைய பார்வையில் ஆபிராம் நீதிமானாக எண்ணப்பட்டான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்த பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

கடைசியாக இந்தப் பாடத்தை இதுவரையிலும் கேட்டிராத உங்கள் நண்பரிடம் போய்ச் சொல்லுங்கள். பாடத்தை சொல்லி முடித்த பிறகு, உங்கள் நண்பரின் முன்பாக இந்தக் கேள்வியை வைத்து அவருடைய பதிலைக் கேளுங்கள். “தேவன் எப்படிப்பட்ட ஜனங்களை இன்று தனக்காக எதிர்பார்க்கிறார். என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?”

ஆபிராமின் வாழ்க்கையின்படி, சூழ்நிலைகள் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், தேவனின் வாக்குத்தத்தத்தை விசுவாசித்து அவருடைய வழி நடத்துதலுக்கு கீழ்படிகிற ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையையும் செம்மைப்படுத்துகிறார்.

பின்வரும் வசனத்தை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள். ‘ஆபிராம் கர்த்தரை விசுவாசித்தான்,அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்’ (ஆதி 15:6). பாடம் முடிந்தது.